செ.வெ.எண்:35 நாள்:16.09.2019

**கரூர் மாவட்டம்**
**“போஷன் அபியான் ஊட்டச்சத்து மாத விழா” தொடர்பான உறுதிமொழியினை அரசு அலுவலர்கள் ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் எடுத்துக்கொண்டனர்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.09.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 372 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது அக்கரை கொண்டு அது அவர்களின் உணர்வின் வடிவமாக நினைத்து அவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக **“போஷன் அபியான் என்ற ஊட்டச்சத்து மாத விழா”** தொடர்பாக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தாய் மற்றும் குழந்தையின் ஊட்சத்து குறைபாடு இல்லாத ஆரோக்கியமான உடல்நிலையை அடைய சரிவிகித சத்தான, ஆரோகிய உணவு, தூய்மையான குடிநீர், சுகாதாரம் சரியான தாய்மை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான உணவூட்டும் பழக்க வழக்கம் தொடர்பாக தேசிய ஊட்டச்சத்து இயக்கம் நாடு முழுவதும் ஒரு மக்கள் இயக்கமாக ஒவ்வொரு வீடு, ஒவ்வொரு பள்ளி, ஒவ்வொரு கிராமம் தோரும் இந்த கருத்துகளை அறிய உதவுவேன் என உறுதிமொழியினை அரசு அலுவலர்கள் ஆட்சித்தலைவர் தலைமையில் எடுத்துக் கொண்டனர்.

மேலும் தமிழக முன்னால் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளையொட்டி பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக நடத்தப்பட்ட சைக்கிள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ,மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி. செல்வசுரபி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.லீலாவதி, உதவி ஆணையர் (கலால்) திருமதி.மீனாட்சி, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**